1979 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இரண்டு கோபுரத் திருப்பணிகளுக்கும் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகலாமென எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. இப்பொது ஆண்டுகள் கடந்திருப்பதால் பத்தாயிரம் ரூபாய் அதிக மாகலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.40)

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி இந்தக் கோயில் பணியில் தங்களை முழுமையாக ஒப்ப படைத்துக் கொண்டிருக்கிற ஊழியர்களை அரசு ஊழியர் களாக்க, சில கோயில்களில், உத்தரவு போடப்பட்டது. அது அமுல் படுத்தப்படவில்லையென்று கூறப்படுகிறதே (மணியடிக் கப்பெற்றது) நேற்று கூட விவரம் சொல்லியிருக்கிருர். எனவே, அதை அமுல்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது கோவில் கும்பாபிஷேகம் பற்றிய கேள்வி. இதில், ஊழியர்களைப் பற்றிய கேள்வி கேட்டால் எப்படி பதில் சொல்லமுடியும்? அமைச் சரிடம் பதில் இருந்தால் சொல்லலாம்.

திரு. க. சுப்பு: நம்முடைய அமைச்சரவர்கள் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் என்று பதில் சொல்லி பழக்கப் பட்டவர்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது திருவண்ணாமலை அருள்மிகு அருணா சலேஸ்வரர் கோவிலின் கோபுரத் திருப்பணிகளைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிக விவரம் தெரிந்த உறுப்பினர், சட்டம் தெரிந்த உறுப்பினர். தனிக் கேள்வி போட்டால்தான் விவரம் சேகரித்துக் தர இயலும் என்று அவரு ருக்குத் தெரியும்.

Tourist Hotel in Mudhumalai Forest area.

*Q. 525.—THIRU K. ABDUL LATHEEF, THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(*a*) Whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a luxury hotel in the Mudhumalai forest area; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, (அ & ஆ)—சுற்றுலா பயணியர் விடுதி ஒன்று கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. அது ஆடம்பர ஓட்டல் அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, ஆடம்பர ஓட்டல் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆடம்பரம் என்றால், என்ன, என்ன அம்சங்கள் அடங்கியுள்ளவை ஆடம்பரம் என்று கூறப் படும். அப்படியென்றால், ஆடம்பர ஓட்டலிலே இந்த அம் சங்கள் அடங்கியிருக்கும் வகையில் முதுமலையிலே கட்ட அர சாங்கம் முடிவெடுத்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் ஆடம்பர ஓட்டல் என்று கேட்டிருக் கிறார். ஆகவே, ஆடம்பர ஓட்டல் என்பதற்குள்ள இலக் கணத்தை அவர்தான் தெரிவிக்கவேண்டும். ஆகவே அவர் தெரிவித்தால்தான் அதுபற்றிய விளக்கத்தைத் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியை திரு. எம். அப்துல் லத்தீப் கேட்கவில்லை, வேறு அப்துல் லத்திப் கேட்டார்.

சிறைச்சாலையில் சலுகைகள்.

*526 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் எதிர்கட்சித் தலைவர் 1977-78ல் சென்னை சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருந்தபோது, விசேஷ சலுகைகள் எவையேனும் அளிக்கப் பட்டதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI The Leader of the Opposition of the Tamil Nadu Legislative Assembly when he was confined as a special remand prisoner in the Central Prison, Madras during 1977-78 sought the permission to bring his transistor radio from his home to keep it in his cell mainly with a view to listen to the news bulletin. Treating this as a special case the Government granted the permission in this regard